## தமிழ்நாடு அரசு

# கால்நடை பராமரிப்புத்துறை

திருவண்ணாமலை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையில் கீழ்காணும் பதவிகளுக்கு தகுதியுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

| வ. எண் | பதவியின் பெயர் | காலி பணியிடங்கள் 01.07.2019 அன்றுள்ளப்படி | கல்வி மற்றும் பிற தகுதிகள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | ஊர்தி ஓட்டுநர் | **2**<br>MBC-DNC(G) (P)-1<br>BC(G)(P)-1 (Expect BCM) | 1) 8-ம் வகுப்பு தேர்ச்சி<br>2) தமிழ் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்<br>3) ஓட்டுநர் உரிமம் நாளது தேதி வரை புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.<br>4) ஊர்தி ஓட்டுவதில் குறைந்தப்பட்சம் 2 வருடம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் (அதற்கான சான்று) | Level - 8<br>Rs. 19500-62000/- |
| 2. | ஆய்வக உடனாள் | **1**<br>GT(P) - 1 | 1)10-ம் வகுப்பு தேர்வு எழுதி மதிப்பெண் பட்டியல் பெற்றிருக்க வேண்டும் | Level - 2<br>Rs. 15900-50400/- |
| 3. | அலுவலக உதவியாளர் | **5**<br>GT (G)(P) - 1<br>SC-A (P) (W) (DW)-1<br>MBC-DNC(G) (P)-1<br>BC(G) (P) -1 (Except BCM)<br>GT(NP)(W)DW-1 | 1) 8-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்க வேண்டும். | Level - 1<br>Rs. 15700-50000/- |

1. விண்ணப்பதாரர் தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் வசிப்பதற்கான ஆதாரத்தின் நகலை இணைத்திட வேண்டும். ( ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்று).
2. காலிப்பணியிடங்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்கள் ஆகியோரின் விகிதாச்சாரத்தை உள்ளடக்கியதாகும்.
3. மேற்கண்ட மூன்று பதவிகளுக்கும் விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின வகுப்பினர்களுக்கு 35 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) 32 ஆகும். பொதுப்பிரிவினருக்கு 30 ஆகும். **(01.07.2019 அன்றுள்ளபடி)**
4. விண்ணப்பங்களை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் https://tiruvannamalai.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒரே விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்
6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மண்டல இணை இயக்குநர் அலுவலகம், கால்நடை பராமரிப்புத்துறை, தண்டராம்பட்டு ரோடு, கால்நடை பெருமருத்துவமனை வளாகம், திருவண்ணாமலை என்ற முகவரிக்கு **10.02.2020 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள்** கிடைக்குமாறு அனுப்பிட வேண்டும் அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டும்.
7. விண்ணப்பிக்கும் பதவியின் பெயரினை மேல் உறையின் மீது பெரிய எழுத்துக்களில் தவறாது குறிப்பிட வேண்டும்
8. மேற்கண்ட பதவிகளுக்கு நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும். நேர்முகக் தேர்வினை எந்த நிலையிலும் நிறுத்துவதற்கு/ ரத்து செய்வதற்கும் மாவட்ட ஆட்சியர்/இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு. நேர்முக தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்கள் இன சுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
9. மேல்குறிப்பிட்ட அனைத்து பதவிகளுக்கும் மாற்றுதிறனாளிகளுக்கும் 10 வருடம் உச்ச வயது வரம்பில் கூடுதலாக வழங்கப்படும்.
10. ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி கல்லூரி படிப்பிற்கு குறைந்ததாக இருந்தால் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒரு விண்ணப்பத்தாரர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் எந்த சாதியை சார்ந்தவராக இருப்பினும் குறைந்த அளவு பொதுக் கல்வியை காட்டிலும், மேற்பட்ட பொதுக் கல்வித் தகுதியை பெற்றவராய் இருந்து அல்லது கல்லூரிப் படிப்பு பட்டம் பெற்றிருந்து நியமிக்கப்படுவதற்கு மற்றபடி தகுதி உடையவராய் இருந்தால் நியமிக்கப்படுவதற்காக வயதுவரம்பு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அந்த வயது அவருக்கு பொருந்தாது.

**மண்டல இணை இயக்குநர்**
**கால்நடை பராமரிப்புத்துறை**
**திருவண்ணாமலை**